# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.09.07 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# விசர்நாய்க்கடி நோயை ஒழித்தல் மற்றும் நாய்களைப் பதிவுசெய்தல்

**நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதல், நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக நாய்களின் இனப்பெருக்கலை ஒழுங்குபடுத்துதல் என்பன மூலம் இலங்கையில் விசர்நாய்க்கடிநோயை ஒழிப்பதற்காகவும்; நாய்களைப் பதிவுசெய்வதற்காகவும்; தேசிய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்பு மதியுரைக் குழுவையும் பிராந்திய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்பு மதியுரைக் குழுக்களையும் தாபிப்பதற்காகவும்; (476 ஆம் அத்தியாயமான) விசர்நாய்க்கடிநோய்க் கட்டளைச் சட்டத்தையும் (477) ஆம் அத்தியாயமான நாய்களைப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தையும் நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டமூலம்**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 144.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## விசர்நாய்க்கடி நோயை ஒழித்தல் மற்றும் நாய்களைப் பதிவுசெய்தல்

ச.வ.-ஓ 68/2025

**நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதல், நாய்களின் எண்ணிக் கையைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வர்த்தக நோக்கங் களுக்காக நாய்களின் இனப்பெருக்கலை ஒழுங்கு படுத்துதல் என்பன மூலம் இலங்கையில் விசர்நாய்க் கடிநோயை ஒழிப்பதற்காகவும்; நாய்களைப் பதிவு செய்வதற்காகவும்; தேசிய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்பு மதியுரைக் குழுவையும் பிராந்திய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்புமதியுரைக் குழுக்களையும் தாபிப்பதற்காகவும்; (476 ஆம் அத்தியாயமான) விசர்நாய்க்கடி நோய்க் கட்டளைச் சட்டத்தையும் (477 ஆம் அத்தியாயமான) நாய்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தையும் நீக்கு வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டம்.**

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்ட மாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம் 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விசர்நாய்க்கடி நோயை ஒழித்தல் மற்றும் நாய்களைப் பதிவு செய்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### விசர்நாய்க்கடிநோய்க்கெதிராக தடுப்பூசி ஏற்றுதலும் நாய்களைப் பதிவுசெய்தலும்

நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதலும் நாய்களைப் பதிவு செய்தலும்

**2**. ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபையினதும் அதன் நிருவாக எல்லைகளின் இடப்பரப்பினுள்ளான ஒவ்வொரு நாய்க்கும் விசர்நாய்க்கடிநோய்க்கெதிராகத் தடுப்பூசி ஏற்றப் படுவதனையும் வருடாந்தம் அத்தகைய உள்ளூர் அதிகார சபையுடன் அது பதிவுசெய்யப்படுவதனையும் உறுதிப் படுத்துதல் அதன் கடமையாதல் வேண்டும்.

PL 15888 - 470 (2026/08)

ஒரு நாயின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப் பாகவுள்ள ஆள், நாய்க்குத் தடுப்பூசி ஏற்றல் மற்றும் அதனைப் பதிவு செய்தலுக்குப் பொறுப் பாகவுள்ளார்

**3.**(அ) ஆறு வாரங்களுக்கு மேற்பட்டதான வயதினதான நாயொன்றின் சொந்தக்காரர் அல்லது அதனை அவரது பொறுப்பின்கீழ் வைத்திருக்கும் எவரேனுமாள், அத்தகைய நாய்க்கு வருடாந்தம் விசர்நாய்க்கடிநோய்க்கெதிராகத் தடுப்பூசி ஏற்றப்படுவதனையும், அது இயைபான உள்ளூர் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்படுவதனையும் செய்வித்தல் வேண்டும்.

(ஆ) ஒரு தெருநாயின் நலம்பேணலுக்கான பொறுப்பை யெடுக்கும் எவரேனுமாள் பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகலாம்.

தடுப்பூசி ஏற்றல் சான்றிதழை வழங்குதல்

**4.**(1) ஒரு நாய்க்குத் தடுப்பூசி ஏற்றுதல், விலங்கு மருத்துவ ரொருவரினால் அல்லது விலங்கு மருத்துவரொருவரின் மேற்பார்வையின்கீழ் புரியப்படுதல் வேண்டும்.

(2) ஒரு சொந்தக்காரரைக் கொண்டுள்ள அல்லது ஓராளின் பொறுப்பின்கீழுள்ள நாயொன்றுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டதன்மேல், இயைபான உள்ளூரதிகாரசபை, ஒரு விலங்கு மருத்துவர் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், அத்தகைய நாய் தொடர்பில் விசர்நாய்க்கடி நோய்க்கெதிராகத் தடுப்பூசி ஏற்றல் சான்றித ழொன்றை வழங்குதல் வேண்டும்.

பதிவுச் சான்றிதழ் முதலியன

**5.**(1) ஒரு நாய்க்குத் தடுப்பூசி ஏற்றியதன்மேலும் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தடுப்பூசி ஏற்றல் சான்றிதழ் வழங்கப்படுவதன்மேலும், நாயின் சொந்தக்காரர் அல்லது அதனை அவரது பொறுப்பின்கீழ் வைத்திருக்கும் ஆள், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது அத்தகைய நாயை இயைபான உள்ளூர் அதிகாரசபையிடம் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) நாயொன்று பதிவுசெய்யப்பட்டதன்மேல், உள்ளூர் அதிகாரசபை, நாயின் சொந்தக்காரருக்கு அல்லது நாயை அவரது பொறுப்பின்கீழ் வைத்திருக்கும் ஆளுக்குப் பதி விலக்கமொன்றையும் பதிவுச்சான்றிதழொன்றையும் வழங் குதல் வேண்டும்.

கட்டாக்காலியான நாய்களும் வனவிலங்குகளும்

**6.**(1) ஒரு சொந்தக்காரரை அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவரைக் கொண்டிராத நாயாகவுள்ள ஒரு கட்டாக்காலியான நாயொன்றின் விடயத்தில், உள்ளூர் அதிகாரசபை, அத்தகைய நாய் விசர்நாய்க் கடிநோய்க்கெதிராகத் தடுப்பூசி ஏற்றப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவசியமற்ற தடுத்துவைப்பதைத் தடுக்கும் நோக்கத்துக்காகத் தடுப்பூசி ஏற்றப்பட்ட அத்தகைய நாயை அடையாளங்காண்பதற்கு அவசியமான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

(2) பதினாறாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு வனவிலங்கின் விடயத்தில், விசர்நாய்க்கடிநோய்க்கெதிராக வாய்வழி தடுப்புமருந்து ஏற்றல் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

தடுப்பூசி ஏற்றல் சான்றிதழையும் பதிவையும் உடைமையில் கொண்டிராமை

**7.**(1) ஒரு நாயின் சொந்தக்காரர் அல்லது அவரது பொறுப்பின்கீழ் நாயொன்றை வைத்திருக்கும் வேறெவரேனுமாள், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் காண்பிக்கப்படும்படி தேவைப்படுத்தப்படும்போது அத்தகைய நாய் தொடர்பில் வழங்கப்பட்ட செல்லுபடியான தடுப்பூசி ஏற்றல் சான்றிதழையும் இயைபான பதிவுச் சான்றிதழையும் காண்பித்தல் வேண்டும்.

(2) ஒரு நாயின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது அவரது பொறுப்பின்கீழ் நாயொன்றை வைத்திருக்கும் ஆளொருவர், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படும்போது, அத்தகைய நாய் தொடர்பில் வழங்கப்பட்ட செல்லுபடியான தடுப்பூசி ஏற்றல் சான்றிதழை அல்லது செல்லுபடியான பதிவுச் சான்றிதழை உடைமையில் கொண்டிராதவிடத்து, அத்தகைய நாய்க்கு விசர்நாய்க்கடிநோய்க்கெதிராகத் தடுப்பூசி ஏற்றுவதற்கும் இயைபான உள்ளூர் அதிகாரசபையிடம் அத்தகைய நாயைப் பதிவுசெய்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின்மூலம் பதினான்கு நாள் என்னும் காலப்பகுதியொன்று அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய எவரேனும் சொந்தக்காரர் அல்லது வேறெவ

ரேனுமாள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க நியாயமானவொரு காரணத்தின் நிமித்தம் சொல்லப்பட்ட உட்பிரிவினால் தேவைப்படுத் தப்பட்டவாறு பதினான்கு நாட்களினுள் அத்தகைய நாய் தொடர்பில் தடுப்பூசி ஏற்றல் சான்றிதழொன்றையும் பதிவுச் சான்றிதழொன்றையும் பெற்றுக்கொள்வதற்குத் தவறினால், அவர் அக்காலப்பகுதியை மேலும் பதினான்கு நாட்களுக்கு நீடிக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு ஓர் அறிவித்தல் வழங்கப்படுகின்றதோ அந்த ஆள், குறித் துரைக்கப்பட்ட காலவரையறைகளினுள் நாய்க்குத் தடுப்பூசி ஏற்றுவதற்கு அல்லது அதனைப் பதிவுசெய்வதற்குத் தவறினால், 5 ஆம் பிரிவின்கீழ் உள்ளூர் அதிகாரசபைக்குச் செலுத்தப்படற்பாலதான பதிவுக்கட்டணத்துடன் சேர்த்து மேலதிகமாக இரண்டாயிரம் ரூபாவான தண்டத்துக்கு அவர் ஆளாதல் வேண்டுமென்பதுடன் உள்ளூர் அதிகாரசபை அத்தகைய நாய்க்குத் தடுப்பூசி ஏற்றி 8 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நாய்கள் பற்றிய இடாப்பில் உடனடி யாக அதனைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

நாய்கள் பற்றிய இடாப்பு

**8.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபையும் அத்தகைய உள்ளூர் அதிகார சபை இடப்பரப்பினுள் நாய்களின் எண்ணிக்கை பற்றிய கணக்கை வைத்திருப்பதற்கென, “நாய்கள் பற்றிய இடாப்பு” என அழைக்கப்பட்டு அறியப்படவேண்டியதும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலானதுமான இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

நாய்களின் சொத்தாண் மையை கைமாற்றுதல்

**9.**(1) ஏதேனும் நாய், அதன் சொந்தக்காரரினால் அல்லது அவரது பொறுப்பின்கீழ் நாயை வைத்திருக்கும் ஆளினால் வேறெவரேனுமாளுக்கு விற்பனை அல்லது கொடைமூலம் அல்லது வேறேதேனும் முறையில் கைமாற்றப்படுமிடத்து, அத்தகைய நாய் அவ்வாண்டுக்காக ஏலவே பதிவுசெய்யப்பட்டிருப்பின், நாயின் புதிய சொந்தக் காரராகவுள்ள அத்தகைய வேறு ஆள் அதனைப் பதிவுசெய்தல் அவசியமாதலாகாது.

(2) அத்தகைய நாயின் புதிய சொந்தக்காரர், முன்னைய சொந்தக்காரரினால் அத்தகைய விற்பனை அல்லது கொடை தொடர்பில் செய்யப்பட்ட புறக்குறிப்பொன்றைக் கொண்டுள்ளதும் நாய் தொடர்பில் ஏலவே வழங்கப்பட்டது மான பதிவுச் சான்றிதழைத் தனதுடைமையில் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் II

## நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல்

நாய்களின் எண்ணிக் கையைக் கட்டுப் படுத்துதல்

**10.** (1) ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபையும், அத்தகைய உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பினுள்ளான எல்லாக் கட்டாக்காலியான நாய்களும், விடயத்துக்கேற்ப, மலடாக்கப் படுதலை அல்லது விதையழிக்கப்படுதலைச் செய்வித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, நாய்களை மலடாக்குதல் அல்லது விதையழித்தல் ஒரு விலங்கு மருத்துவரினால் மட்டுமே புரியப்படுதல் வேண்டும்.

(3) ஒரு நாயை மலடாக்கியதன் அல்லது விதையழித் ததன்மேல், உள்ளூர் அதிகாரசபை, பின்வருவனவற்றுக்காக அவசியமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் -

(அ) அவசியமற்ற மீள்கைப்பற்றுகையையும் மலடாக் குதலை அல்லது விதையழிக்கப்படுதலை தடுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய நாயை அடையாளங்காணுதல் வேண்டும்;

(ஆ) அவ்வாறு மலடாக்கப்பட்ட அல்லது விதையழிக் கப்பட்ட அத்தகைய நாய் முழுமையாகக் குணப்படும்வரை அதன் உடனல நிலைமைக்கு உரிய கவனத்துடன் அத்தகைய நாயை கவனித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய நாய் எவ்விடத்தில் கைப்பற்றப் பட்டதோ குணமான பின்னர் அதே இடத்தில் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய மலடாக்கல் அல்லது விதையழித்தல் மற்றும் (3) ஆம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட எல்லா வழிமுறைகளும் தொடர்பான எழுத்திலான பதிவேடுகளை உள்ளூர் அதிகாரசபை பேணுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் மலடாக்கல் அல்லது விதையழித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும்போது உள்ளூர் அதிகார சபை, ஏதேனும் அரசாங்க அல்லது அரசசார்பற்ற அமைப்பின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

## பாகம் III
## இனப்பெருக்க நிலையங்களை ஒழுங்குபடுத்துதல்

இனப்பெருக்க நிலையங்களுக்கு உரிமமளித்தல்

**11.**(1) ஓர் இனப்பெருக்க நிலையம் எவ்விடத்தில் அமைந்துள்ளதோ அவ்விடத்தின் இயைபான உள்ளூர் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, நாய்களின் வழித்தோன்றல்களை விற்பனைசெய்யும் நோக்கத்துக்காக ஆள் அவற்றுக்கான இனப்பெருக்க நிலையத்தைக் கொண்டு நடாத்தலாகாது.

(2) நாய்களின் வழித்தோன்றல்களை விற்பனைசெய்யும் நோக்கத்துக்காக ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை இடப் பரப்பினுள் அவற்றுக்கான இனப்பெருக்க நிலையமொன்றை கொண்டுநடாத்துவதற்கு உட்கருதும் எவரேனுமாள், அத்தகைய நிலையத்துக்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கானவொரு விண்ணப்பத்தை, விதித்துரைக்கப் பட்ட படிவத்தில் இயைபான உள்ளூர் அதிகார சபைக்குச் செய்தல் வேண்டும்.

(3) விண்ணப்பமானது விதித்துரைக்கப்பட்ட விபரங் களுடனும் விதித்துரைக்கப்பட்டவொரு கட்டணத்துடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(4) உள்ளூர் அதிகாரசபை, (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், உத்தேசிக்கப்பட்ட இனப்பெருக்க நிலையம் தொடர்பாகச் சோதனையொன்றை நடாத்துதல் வேண்டும்; இது, ஒரு விலங்கு மருத்துவரினால் அல்லது அத்தகைய உள்ளூர் அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் நிறை வேற்றப்படுதல் வேண்டும்.

(5)(அ) நான்காம் உட்பிரிவின்கீழான சோதனையொன்று நிறைவேற்றப்படுமிடத்து, விலங்கு மருத்துவர் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய சோதனை தொடர்பாக உள்ளூர் அதிகாரசபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) உள்ளூர் அதிகாரசபை, விடயத்துக்கேற்ப, விலங்கு மருத்துவரினால் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைக் கவனத்திற்கொண்டு விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்கலாம் அல்லது வழங்கமறுக்கலாம்; அத்துடன் விண்ணப்பம் மறுக்கப்படுமிடத்து, அத்தகைய முடிபு மேற்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாதவொரு காலப்பகுதியினுள், மறுப்புக்கான காரணங்களை எழுத்தில் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கலாம்.

(6) ஓர் இனப்பெருக்க நிலையம் தொடர்பில் உரிமமொன்றை வைத்திருப்பவர் பின்வருவனவற்றுக்காக அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும் :-

(அ) போதிய உணவு, நீர், படுக்கை, உடற்பயிற்சி வசதிகள், வெளிச்சமிடுகை, காற்றோட்டம், தட்ப வெப்பநிலை, புகலிடம் மற்றும் விலங்கு மருத்துவக் கவனிப்புடன் அந்த நிலையத்திலுள்ள நாய்களுக்கு சுகாதாரமுறையிலான சூழலை வழங்குதல்;

(ஆ) நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கும் கட்டுப் படுத்துவதற்கும் எல்லா முற்காப்புகளையும் எடுத்தல்;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நாய்களுக்கு இனப்பெருக்கம் மற்றும் அவசியமான கவனிப்புத் தொடர்பான அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்; அத்துடன்

(ஈ) தீ மற்றும் வெள்ளங்கள் போன்ற அவசரகால நிலைமைகளில் நாய்களைப் பாதுகாத்தல்.

(7) ஏதேனும் இனப்பெருக்க நிலையத்தில் ஏதேனும் நாய் இறக்கும் விடயத்தில், உரிமம் வைத்திருப்பவர் அத்தகைய இறப்புப்பற்றி இயைபான உள்ளூர் அதிகாரசபைக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(8) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் உரிமம் வைத்திருப்பவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

வளவுகளைச் சோதனை யிடுதல்

**12.** (1)(அ) நாய்களுக்குத் தொடுநோய்களின்மூலம் தொற்று ஏற்படாதிருப்பதைத் தடுக்கும் நோக்கத்துக்காக, உள்ளூர் அதிகாரசபையொன்று, அதன் நிருவாக எல்லைகளின் இடப் பரப்பினுள் அமைந்துள்ள இனப்பெருக்க நிலையமொன்றின் எவையேனும் வளவுகளைச் சோதனையிடும் படி எவரேனும் விலங்கு மருத்துவருக்கு அல்லது வேறெவரேனும் அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

(ஆ) இப்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனு மாள், அவ்வாறு தேவைப்படுத்தப்படின், அதிகார ஆவணத்தை காண்பிப்பதன்மீது, (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் அத்தகைய எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்து அத்தகைய வளவுகளையும் அதன்கண் காணப் படும் எவையேனும் நாய்களையும் அல்லது எதையும் சோதனையிடலாம்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக “வளவுகள்” என்பது, ஒரு “வதிவிடத்தையும்” உள்ளடக்கும்.

உரிமமொன்றைப் புதுப்பித்தல், இல்லா தாக்குதல் அல்லது இடை நிறுத்துதல்

**13.**(1) பதினோராம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிம மொன்று வழங்குகைத் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதகாலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டு மென்பதுடன், அதற்கென விண்ணப்பம் செய்யப்படு வதன்மேல், ஒருதடவையில் பன்னிரெண்டு மாதங்களைக் கொண்டவொரு மேலதிகக் காலப்பகுதிக்குப் புதுப்பிக்கப் படலாம்.

(2) ஓர் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் விதித் துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) ஓர் உரிமம் வைத்திருப்பவர், அத்தகைய உரிமத்தின் முடிவுறுகைத் தேதிக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அத்தகைய புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்காதவிடத்து, உரிமமானது அத்தகைய முடிவுத்திகதியின் பின்னர் இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எவரேனும் உரிமம் வைத்திருப்பவர் உரிமத்தின் ஏதேனும் நிபந்தனைக்கு இனங்கியொழுகத்தவறியிருந்தால் அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறி யிருந்தால், உள்ளூர் அதிகாரசபை, அத்தகைய உரிமம் வைத் திருப்பவருக்கு வழங்கப்பட்ட உரிமம் இல்லா தாக்கப்பட்டமை அல்லது இடைநிறுத்தப்பட்டமை பற்றிய அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட உரிமமொன்று (4) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய உரிமம் இல்லாதாக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுறுமுன்னர் ஒரு புதிய உரிமத்துக்காக விண்ணப்பிப்பதற்கு அத்தகைய ஆள் தகவுடையவரல்லர்.

மேன்முறை யீடுகள்

**14.** (1) ஓர் உரிமத்தை வழங்குவதற்கு அல்லது புதுப் பிப்பதற்கு மறுக்கின்றமையினால் அல்லது ஓர் உரிமத்தின் இடைநிறுத்துகையினால் அல்லது இல்லாதாக்குகையினால் இன்னலுற்ற எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, அத்தகைய மறுப்பு, இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகை பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கும் எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான முடிபு, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் செய்யப் படுதல்வேண்டுமென்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டைச்

செய்யும் ஆளுக்கு அத்தகைய முடிபுத்தேதியிலிருந்து ஏழுநாட் களினுள் முடிபு பற்றி அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் IV

## விசர்நாய்க்கடிநோய் பரவுவதனைக் கட்டுப்படுத்துதல்

உள்ளூர் அதிகாரசபை யினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் மீது நாய்களைத் தடுத்துவைத்தல்

**15.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவையும் எவ்வாறிருப்பினும், விசர்நாய்க்கடிநோய் உள்ளவிடத்து, அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் நிருவாக எல்லைகளினுள் விசர்நாய்க்கடிநோய் ஏற்படும் அபாயம் உள்ளவிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபை, துலாம்பரமான இடங்களில் வெளிக்காட்டிவைக்கப்படவேண்டிய எழுத்திலான அறிவித்தல் மூலம் அல்லது அவ்விடப்பரப்பினுள்ளான ஒலிப்பரப்பின் மூலம், அல்லது அத்தகைய வேறு வழிவகைகள் மூலம், அத்தகைய வழிகளினுள் அடங்கியுள்ள இடப்பரப்பை அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களுட்பட அதன் ஏதேனும் பாகத்தை, விடயத்துக்கேற்ப, விசர்நாய்க்கடிநோய் அதனுள் உள்ள அல்லது விசர்நாய்க்கடிநோய் ஏற்படும் அபாயம் அதனுள் உள்ள இடப்பரப்பொன்றாக வெளிப் படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் நிருவாக எல்லைகளினுள்ளான ஏதேனும் பொது இடத்தில் அல்லது வீதியில், அல்லது அத்தகைய எல்லைகளினுள்ளான தனியார் கட்டிடம், வளவு அல்லது தோட்டம் தவிர்ந்த ஏதேனுமிடத்தில் கட்டிவைக்கப்படாமல் அல்லது வழிநடாத்தப்படாமல் காணப்பட்ட ஏதேனும் நாய், அத்தகைய நாய்க்கு விசர்நாய்க் கடிநோய்த்தொற்று ஏற்பட்டிருக்கலாமென நம்புவதற்கு நியாயமான காரணமிருக்கும் பட்சத்தில், 12 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அவதானிப்புக் காகத் தடுத்துவைக்கப்படுவதற்கு அது உட்பட்டதாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, உள்ளூர் அதிகாரசபை, அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் நிர்வாக எல்லைகளினுள் பொருத்தமான தடுத்துவைத்தல் நிலையங் களையும் அவதானிப்புக் கூடங்களையும் ஏற்பாடுசெய்தலும் பேணுதலும் வேண்டும்.

(4)(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஏதேனும் நாயின் அத்தகைய தடுத்துவைத்தலின்மேல், இடப்பரப்பின் அரசாங்க விலங்கு மருத்துவர், நாய்க்கு விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாவென்பதை நிச்சயிப்பதற்கு, கிரமமான கால இடைவெளிகளில் தடுத்து வைத்தல் இடத்தைச் சென்றுபார்த்தல் வேண்டும்.

(ஆ) இயைபான இடப்பரப்புக்கு நியமிக்கப்பட்ட விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் விலங்கு மருத்துவர் அத்தகைய தடுத்துவைத்தல் இடத்தைச் சென்றுபார்த்து நாயை அவதானிப்பதற்கு உரித் துடையவராதல் வேண்டும்.

(5) விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் விலங்கு மருத்துவரின் கலந்தாலோசனையுடன், (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செயலாற்றுகின்ற இடப்பரப்பின் அரசாங்க விலங்கு மருத்துவர் நாய்க்கு விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதென அபிப் பிராயப்படின், அத்தகைய அரசாங்க விலங்கு மருத்துவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் விலங்கு மருத்துவர், பொதுமக்களுக்கு உடனடி அபாயம் ஏற்படுவதனைத் தடுப்பதற்கு அத்தகைய நாயைக் கருணைக் கொலை செய்யலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவின் நோக்கங்களுக்காக அடையாளங்காணப்பட்ட ஏதேனும் தடுப் பிடத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) இரண்டாம் உட்பிரிவின்கீழ் தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் நாய் விசர்நாய்க்கடிநோய் அற்றதாகக் காணப் படுமிடத்து, அது விசர்நாய்க்கடிநோய்க்கெதிராகத் தடுப்பூசி ஏற்றப்படுவதற்கு உட்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் மலடாக்கல் அல்லது விதையழித்தலுக்கும் உட்படுத்தப் படுதலும் வேண்டும்; அத்துடன் அது எவ்விடத்தில் கைப் பற்றப்பட்டதோ அந்த இடத்தில் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(8) முதலாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல் (1) ஆம் உட்பிரிவினால் ஏற்பாடு

செய்யப்பட்டவாறு வெளிப்படுத்தப்பட்டதன்மீது பயனுறுதல் வேண்டுமென்பதுடன் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலேனும் வெளியிடப்படுதலும் வேண்டும்.

தொற்று ஏற்பட்டனவாகக் கண்டுப் பிடிக்கப்பட்ட அல்லது சந்தேகிக்கப் பட்ட கால்நடை விலங்குகள் அல்லது வனவிலங்குகள்

**16.** விசர்நாய்க்கடி நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாக ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பினுள் ஏதேனும் கால்நடை விலங்கு அல்லது வனவிலங்கு கண்டுப்பிடிக்கப்படுமிடத்து,-

(அ) ஒரு கால்நடை விலங்கின் விடயத்தில், இயைபான இடப்பரப்புக்கு நியமிக்கப்பட்ட பணிப்பாளர் அல்லது அரசாங்க விலங்கு மருத்துவர்;

(ஆ) ஒரு வனவிலங்கின் விடயத்தில், இயைபான இடப்பரப்புக்கு நியமிக்கப்பட்ட பணிப்பாளர் அல்லது அரசாங்க விலங்கு மருத்துவர் அல்லது இயைபான இடப்பரப்புக்கு நியமிக்கப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வனசீவராசிகள் சுகாதாரப் பணிப்பாளர் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் விலங்கு மருத்துவர் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி,

என்போருக்கு இயைபான இடப்பரப்பில் ஏனைய விலங்குகளுக்கு விசர்நாய்க்கடிநோய் பரவுவதனை நிறுத்துவதற்கு அவசியமான கட்டுப்படுத்தல் வழிமுறைகளை அல்லது பாதுகாப்பு வழிமுறைகளை எடுக்கும் நோக்கத்துக்காக அது பற்றி உடனடியாக அறியத்தருதல் வேண்டும்.

## பாகம் V

### தேசிய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்பு மதியுரைக் குழு

தேசிய விசர் நாய்க்கடி நோய் ஒழிப்பு மதியுரைக் குழு

**17.**(1) பின்வருவோரைக் கொண்டுள்ளதும் (இதனகத்துப் பின்னர் "தேசியக் குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) தேசிய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்பு மதியுரைக் குழு தாபிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-

(i) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(ii) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளர் அல்லது அவ்வமைச்சின் மேலதிகச் செயலாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(iii) விலங்குச் சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளர் அல்லது அவ்வமைச்சின் மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(iv) அமைச்சரின் அமைச்சினது மேலதிகச் செயலாளர்;

(v) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி;

(vi) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளரின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பொதுச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(vii) பொதுச் சுகாதார விலங்குச் சேவைகளின் பணிப்பாளர்;

(viii) சுகாதார அமைச்சின் பிரதான தொற்று நோயியல் நிபுணர்;

(ix) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சுகாதார அமைச்சின்கீழ்

பணியாற்றுகின்ற மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் கிருமியியலாளர்;

(x) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர்;

(xi) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளரின் விதப்புரையின்மீது விலங்குச் சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கிருமியியலாளர்;

(xii) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி;

(xiii) மேலதிகப் பணிப்பாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திலிருந்து இரு பிரதிநிதிகள்;

(xiv) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதான தொற்று நோயியலாளர்;

(xv) விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட விலங்குப் பொதுச் சுகாதார விசேடநிபுணர்;

(xvi) உள்ளூராட்சி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அந்தந்த மாகாண அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்;

(xvii) உள்ளூராட்சி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அந்தந்த மாகாண அமைச்சர்களின் கலந்தாலோசனையுடன் ஒவ்வொரு மாகாண சபையினதும் பிரதான செயலாளரின் நியமத்தர் ஒருவர்;

(xviii) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அலுவலர் ஒருவர்;

(xix) 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்குகள் மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை விலங்கு மருத்துவப் பேரவையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட விலங்கு மருத்துவர் ஒருவர்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவர்களும்) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவும் சமூக சேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வையும்) சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விலங்கு நலம்பேணல் ஒழுங்கமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களும் சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களுமான நான்கு உறுப்பினர்கள்;

(2) (அ) அமைச்சர், தேசியக் குழுவின் எவரேனும் உறுப்பினரை அத்தகைய குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(ஆ) தேசியக் குழுவின் ஒவ்வொரு பதவிவழியுறுப்பினரும், அவர் எந்தப் பதவியின் பயனைக்கொண்டு அத்தகைய குழுவின் உறுப்பினரொருவராகவுள்ளாரோ அந்தப் பதவியை அவர் வகிக்கும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

(3) தேசியக் குழு, உறுப்பாண்மையிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும், அதன் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) தேசியக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) தேசியக் குழு, ஆகக்குறைந்தது இரு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூடுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தேசியக் குழு, அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பாக அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குப்படுத்தலாம்.

தேசியக் குழுவின் உறுப்பினர்களுக்கான ஊதியம்

**18.** தேசியக் குழுவின் உறுப்பினர்கள், தேசியக் குழுவின் கூட்டங்களுக்கு வருகைதருவதற்காக அவர்களுக்கு அளிக் கப்படக்கூடிய தகைமைக்கொடையை தவிர, தேசியக் குழுவில் இருப்பதற்காக ஏதேனும் ஊதியத்தைப் பெறுதலாகாது.

தேசியக் குழுவின் பணிகள்

**19.** தேசியக் குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தை நிருவகிப்பதிலிருந்து எழுகின்ற கருமங்கள்மீது இயைபான அமைச்சர்களுக்கும் உள்ளூராட்சி என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்ட மாகாண அமைச்சர்களுக்கும் வேறு தொடர்புபட்ட நிறுவனங்களுக்கும் மதியுரை யளித்தல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பொறுப்பிக்கப்பட்ட தத்து வங்களும் பணிகளும் உரித்தாக்கப்படும்

அதிகாரிகளினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்தலும் அவசியமானவிடத்து, பரிகார வழிமுறைகளை விதத்துரைத்தலும்;

(இ) விசர்நாய்க்கடிநோயைத் தடுத்தல் பற்றிப் பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்;

(ஈ) விசர்நாய்க்கடிநோய் ஒழிப்புக்கான ஒத்துழைப்பையும் நிதியளிப்பையும் பரிந்துகேட்டல்;

(உ) விசர்நாய்க்கடிநோயை நீக்குதல் முற்றிலும் ஒழித்தல் என்ற துறையில் தேசிய மற்றும் சர்வதேச அபிவிருத்திகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் விசர் நாய்க்கடிநோயை ஒழிப்பதற்கு அவசியமான விதப்புரைகளைச் செய்தலும் தடுப்பூசிகள் மற்றும் விலைப்பயனுறுதியுள்ள தடுப்பூசி ஏற்றல் முறைகளை அபிவிருத்தி செய்தலும்;

(ஊ) இச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகளுக்கிணங்க நாட்டிலுள்ள நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்தல்;

(எ) ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை நாய்களின் தொகைமதிப்பை நடாத்துதல்; அத்துடன்

(ஏ) தேசியக் குழுவின் பணிகளைப் பயனுற நிறைவேற்றுவதற்காக மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் உபகுழுக்களை நியமித்தல்.

## பாகம் VI

### பிராந்திய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்பு மதியுரைக் குழு

பிராந்திய விசர்நாய்க்கடி நோய் ஒழிப்பு மதியுரைக் குழு

**20.** (1) பின்வருவோரைக் கொண்டுள்ளதும் (இதனகத்துப் பின்னர் “பிராந்தியக் குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்புக்கானதுமான பிராந்திய விசர்நாய்க்கடிநோய் ஒழிப்பு மதியுரைக் குழு தாபிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழியுறுப்பினர்கள், அதாவது -

(i) பிராந்தியக் குழுவின் தவிசாளராகவிருக்க வேண்டிய அவ்வவ் உள்ளூர் அதிகார சபையின் தவிசாளர்;

(ii) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(iii) இயைபான இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட அந்தந்த உள்ளூர் அதிகாரசபையின் உதவி ஆணையாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(iv) அவ்வவ் உள்ளூர் அதிகாரசபை இடப் பிரதேசத்திலுள்ள சுகாதார மருத்துவ அலுவலர்;

(v) அவ்வவ் உள்ளூர் அதிகாரசபையின் அரசாங்க விலங்கு மருத்துவர்;

(vi) அவ்வவ் உள்ளூர் அதிகாரசபையினுள் கடமைகள் குறித்தளிக்கப்பட்டவரும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதியினால் பெயர்குறித்துநியமிக்கப் பட்டவருமான அலுவலரொருவர்;

(vii) முறையான உள்ளூர் அதிகாரசபையின் செயலாளர்; அத்துடன்

(ஆ) உள்ளூர் அதிகாரசபையின் தவிசாளரினால் நியமிக்கப்பட்ட பொதுமக்களாகவுள்ள உறுப்பி னர்கள் இருவர்; அவர்களுள் ஒருவர் விலங்கு நலம்பேணல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஓர் ஒழுங்கமைப்பிலிருந்தானவராதல் வேண்டும்.

(2) பிராந்தியக் குழுவின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

**21.** பிராந்தியக் குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:- பிராந்தியக் குழுவின் பணிகள்

(அ) பாகம் II இன் ஏற்பாடுகளுக்கிணங்க இயைபான உள்ளூர் அதிகாரசபையின் இடப் பரப்பினுள்ளான நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்தல்;

(ஆ) விசர்நாய்க்கடிநோய்த் தவிர்த்தல் பற்றிப் பொது மக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இயைபான உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பினுள் விசர் நாய்க்கடிநோய் பரவுவதனைக் கட்டுப் படுத்துவதற்கும் ஒழிப்பதற்குமான நடவடிக்கை களை எடுத்தல்.

## பாகம் VII

## பொது

**22.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பின்வருவோர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராதல் வேண்டும்:- அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர்கள்

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவரது சார்பில் செயலாற்றுவதற்கு, ஒரு விலங்கு மருத்துவர், அல்லது மாநகரசபையின் நகர பிதாவினால் அல்லது பிரதேசசபையின் தவிசாளரினால் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர்;

(ஆ) ஒரு பொலிசு அலுவலர்; அத்துடன்

(இ) ஒரு சுகாதார மருத்துவ அலுவலர்.

அதிகாரமளிக் கப்பட்ட அலுவலரின் தத்துவங்கள்

**23.**(1) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறுகை இருந்துள்ளதென நம்புவதற்கு எவரேனும் அதிகார மளிக்கப்பட்ட அலுவலருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ள விடத்து, அவர்-

(அ) நாளின் ஏதேனும் நியாயமான நேரத்தில், ஏதேனும் விசர்நாய், பதிவுசெய்யப்படாத நாய் அல்லது விசர்நாய்க்கடிக்கெதிராக தடுப்பூசி ஏற்றப்பட்டிராத ஒரு நாய் வைத்திருக் கப்படுகின்றதென அவர் நம்புகின்ற ஏதேனும் இடத்தினுட் பிரவேசிக்கலாம்;

(ஆ) வளவுகளிலுள்ள ஏதேனும் நாயை பரிசோதனை செய்யலாம்;

(இ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் நாயை அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குக் கைப்பற்றித் தடுத்து வைக்கலாம்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏதேனும் மீறுகையைக் கண்டுப்பிடிப்பதற்கு அவரது அபிப்பிராயத்தில் உதவக்கூடிய ஆவணமுட்பட, வளவுகளையும் வளவுகளிலுள்ள எதனையும் சோதனையிடலாம்;

(உ) பயனுள்ள தேடுகைத் தொழிற்பாடொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, விசர்நாய்க் கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ள ஏதேனும் நாய் கொண்டுசெல்லப்படும் ஏதேனும் வாகனத்தை நிறுத்தி அல்லது தடுத்துவைத்து அந்த வாகனத்தை தேடி அத்தகைய ஏதேனும் நாணய பரீட்சிப்பு செய்யலாம்;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏதேனும் மீறுகையைக் கண்டுபிடிப்பதற்கு அவரது அபிப்பிராயத்தில் உதவக்கூடிய வளவுகளில் அல்லது வளவுகளின்மீது கண்டுபிடிக்கப்படும்

ஏதேனும் ஆவணத்தின் பிரதிகளை அல்லது அவற்றிலிருந்தான பிரித்தெடுத்த பகுதிகளை எடுக்கலாம்;

(எ) வளவுகளின் அல்லது வளவுகளிலுள்ள ஏதேனும் நாயின் நிழற்படங்களை எடுக்கலாம் அல்லது திரைப்படங்களை அல்லது காணொளி நாடாக்களை எடுக்கலாம்;

(ஏ) ஏதேனும் நாயை, அல்லது சட்டத்தின்கீழான தவறொன்றுடன் சம்பந்தப்பட்டுள்ளதென, நியாயமான ஏதுக்களின்மீது அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர் நம்புகின்ற ஆவணமுட்பட எதனையும் கைப்பற்றலாம்;

(ஐ) இப்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதனை இயலச்செய்வதற்கு நியாயமானமுறையில் அவசியமானவாறான அத்தகைய உதவியை அத்தகைய அலுவலருக்கு அளிக்கும்படி வளவுகளிலுள்ள எவரேனுமாளைத் தேவைப் படுத்தலாம்;

(ஒ) ஒரு விலங்கு மருத்துவரின் உதவியுடன், வளவுகளில் கண்டுபிடிக்கப்படும் நாயொன்றின் இழையம், இரத்தம், சிறுநீர் அல்லது வேறு உடற்சார் பொருளின் மாதிரியை எடுக்கலாம்; அத்துடன்

(ஓ) இப்பிரிவின்கீழான தத்துவங்களை அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர் பிரயோகிப்பதனை இயலச் செய்யக்கூடிய ஏதேனும் கருமம்பற்றி, அவர் நியாயமானதெனக் கருதினால் வளவுகளிலுள்ள எவரேனுமாளிடமிருந்து விசாரிக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் செயலாற்றுகின்ற அதிகாரமளிக் கப்பட்ட அலுவலர் ஒருவர், அவ்வாறு தேவைப்படுத்தப்படின், அவரது அதிகார ஆவணத்தைக் காண்பிக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவினைப் பின்பற்றி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எந்த வளவுகளினுட் பிரவேசிக்கின்றாரோ அந்த வளவுகளின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் மற்றும் அதன்கண் காணப்படும் ஒவ்வோர் ஆளும், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகுவதற்குத் தேவைப்படக்கூடியவாறான நியாயமான எல்லா உதவிகளையும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அளித்தலும் எவையேனும் தகவல்களை அவருக்குக் கொடுத் துதவுதலும் வேண்டும்.

**24.**(1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத் தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது அது தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டு மென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் பின்வரும் கருமங்களுள் எவற்றுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கு ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்:-

(அ) உள்ளூர் அதிகாரசபை தகுதியெனக் கருதக் கூடியவாறான விலக்களிப்புகள் எவை யேனுமிருப்பின் அவற்றுடன், ஏதேனும் பொது வீதியில் அல்லது இடத்தில் அல்லது அதன்மீது இருக்கையில் நாய்களின் வாயை மூடுதல்;

(ஆ) நாய்களின் சொந்தக்காரரினால் அல்லது அவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினால் அவற்றைக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருத்தல்;

(இ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட முறையில் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கப் படாத நாய்களைக் கைப்பற்றுதலும் தடுத்து வைத்தலும்;

(ஈ) கைப்பற்றித் தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் நாயின் தடுத்துவைப்புத் தொடர்பில் உறப் பட்ட செலவுகள் ஏதேனும் நாயின் சொந்தக் காரர்களிடமிருந்து அல்லது அவரது பொறுப்பின் கீழ் நாயை வைத்திருக்கும் ஆளிடமிருந்து உள்ளூர் அதிகாரசபையினால் அறவிடப்படுதல்;

(உ) நாய்களின் காட்சிகளை அல்லது கண்காட்சிகளை நடாத்துதலையும் மற்றும் அவற்றில் கண் காட்சிக்காக அல்லது விற்பனைக்காக நாய்களை வெளிக்காட்டிவைத்தலையும் ஒழுங்குப் படுத்துதல்;

(ஊ) நாய்களுக்குக் கிருமிபாய்ச்சல் அல்லது அவற்றைப் பரீட்சித்தலுக்கான கிருமிபாய்ச்சல் நிலையங்களாக ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பினுள் நிலையங்களைத் தாபித்தலும் அத்தகைய நிலையங்களை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்;

(எ) விசர்நாய்க்கடிநோய் இருக்கின்றமையை கண்டுப்பிடிப்பதற்கென நாய்களை அல்லது சந்தேகிக்கப்பட்ட விலங்குகளைக் கட்டாயமாகப் பரீட்சித்தல்;

(ஏ) நாய்களைப் பரீட்சித்தல் அல்லது அவற்றுக்குப் கிருமிபாய்ச்சல் தொடர்பில் கட்டணங்களை விதித்தலும் அறவிடுதலும்;

(ஐ) மலடாக்குதல் அல்லது விதையழித்தல் மூலம் விஞ்சுதலாகாவுள்ள நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல்;

(ஒ) வெளிக்களச் சோதனைகளை நிறைவேற்றுவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை;

(ஓ) நாய்களைப் பதிவுசெய்தல், உரிமங்களைப் புதுப்பித்தல் மற்றும் அவற்றுக்கு உரிமமளிப் பதற்காக விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஔ) இனப்பெருக்க நிலையங்களில் நாய்களை விற்பனை செய்தல் தொடர்பான நிபந்தனைகள்;

(க) நாய்களை இனப்பெருக்குவதற்கான நியமங்கள் தொடர்பான நிபந்தனைகள்; அத்துடன்

(ங) விசர்நாய்களைத் தனிமைப்படுத்தல் தொடர்பான நிபந்தனைகள்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் இயலக்கூடியதான விரைவாக அங்கீகரிக்கப் படுவதற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் உரியமுறையில் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாக அவ்வாறு கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**25.** (1) ஒரு பொது இடத்தில் நாயொன்றை கைவிடும் ஒரு நாயின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது வேறெவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் ஒரு நீதிவான்முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். தவறுகள்

(2) விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ள அல்லது விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுஉள்ளதென நியாயயமானமுறையில் சந்தேகிக்கப்பட்ட ஒரு நாயினால் கடிக்கப்பட்டுள்ள ஒரு நாயின் சொந்தக்காரர் அல்லது அறிந்துகொண்டு தனதுடைமையில் அதனை வைத்திருக்கும் வேறெவரேனுமாள், உள்ளூர் அதிகாரசபைக்கு அதுபற்றி அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு செய்யத் தவறினால், இச் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர்முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ள ஒரு நாய் தொடர்பாக அறிவித்தல் பெறுகின்ற ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபையும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதன்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் கடமையைப் புரிவதற்கு அது தவறினால் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ள அல்லது விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதென நியாயயமானமுறையில் சந்தேகிக்கப்பட்ட ஒரு நாயினால் கடிக்கப்பட்டிருக்குமென அறிந்துகொண்டு அத்தகைய நாயை அலைந்துதிரிவதற்கு அனுமதிக்கும் விசர்நாய்க்கடிதொற்று ஏற்பட்டுள்ள அல்லது விசர்நாய்க்கடிதொற்று ஏற்பட்டுள்ள சந்தேகிக்கப்பட்ட ஒரு நாயின் ஒவ்வொரு சொந்தக்காரரும் அல்லது ஒரு நாய்க்குப் பொறுப்பாகவுள்ள ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு

அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) எவரேனுமாள் -

(அ) ஒரு நாயைச் சட்டமுறையாகக் கைப்பற்றியுள்ள வேறெவரேனுமாளின் கட்டுக்காப்பிலிருந்து அதனை அகற்றினால்; அல்லது

(ஆ) நாயொன்றைச் சட்டமுறையாகக் கைப் பற்றுதலில், தடுத்துவைப்பதில் அல்லது அழிப் பதில் அல்லது அதிலிருந்து வேறெவரேனு மாளுக்கு எவ்வழியிலும் தொந்தரவு கொடுத்தல், முட்டுக்கட்டையிட்டால் அல்லது அவரைத் தடுத்தால்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர்முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

விலங்கு மருத்துவரின் கடமை

**26.** ஒவ்வொரு விலங்கு மருத்துவரும் –

(அ) இயைபான இடப்பரப்பில் அல்லது மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றப்பட்ட நாய்கள் பற்றிய இடாப்பை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;

(ஆ) இயைபான இடப்பரப்பில் அல்லது மாவட்டத்தில் கண்டுப்பிடிக்கப்பட்ட விசர்நாய்க்கடி நோயின் நிலைமையை கிரமமான அடிப்படையிலும் ஆகக்குறைந்தது ஒரு மாதத்துக்கொரு தடவையேனும் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

**27.** ஒவ்வொரு சுகாதார மருத்துவ அலுவலரும், நாய்க்கடிச் சம்பவங்கள் தொடர்பான தகவல்களை, அத்தகைய சம்பவங்கள் நடைபெற்ற இடம், தேதி மற்றும் நேரமுட்பட, இயைபான இடப்பரப்பின் அரசாங்க விலங்கு மருத்துவருக்கு வழங்குதல் வேண்டும். சுகாதார மருத்துவ அலுவலரின் கடமை

**28.** ஏதேனும் நாயின் சொந்தக்காரர், அத்தகைய நாயினால் எவரேனுமாளின் மீதான அல்லது விலங்கின் மீதானவொரு தாக்குதலில் விளைவிக்கப்பட்ட சேதங்களுக்காகவும் அதனால் ஏற்பட்ட ஊறுகளுக்காகவும் பொறுப்பாதல் வேண்டும். சொந்தக்காரரொருவரின் பொறுப்பு

**29.** சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாய்க்கு விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டிருக்கின்றது அல்லது ஏற்பட்டுள்ளது என்ற பொருள்பட ஒரு விலங்கு மருத்துவரின் சான்றிதழொன்று, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக நீதி மன்றமொன்றில் அத்தகைய நிகழ்வுபற்றி முடிவான சான்றாதல் வேண்டும். சான்றிதழ் முடிவான சான்றாகுமிடத்து

**30.** இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகக் கருதப் படுதல் வேண்டும். சட்டத்தின் கீழான தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்யத் தக்கனவாதல் வேண்டும்

**31.**(1) ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிவான், விதிக்கப்படக் கூடிய ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, பின்வருவனவற்றுக்காகக் கட்டளையிடலாம்:- குற்றத்தீர்ப்பளிப்பின் பின்னர் செலவுகளை இழப்பித்தலும் மீளளித்தலும்

(அ) எந்நாய் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந் நாயை இழப்பித்தல்;

(ஆ) தவறு புரியப்படுவதில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் ஆயுதத்தை, கருவியை அல்லது வாகனத்தை இழப்பித்தல்; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி ஏதேனும் நாயானது எந்த ஆளின் அல்லது நிறுவனத்தின் கட்டுக்காப்பில் இடப்பட்டதோ

அந்த ஆளினால் அல்லது நிறுவனத்தினால் உறப் பட்ட செலவுகளை மீளளித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழானவொரு கட்டளையை ஆக்குவதில், நீதிவான் நாயின் கவனிப்பும் கட்டுகாப்பும், (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு பொருத்தமான ஆளுக்கு அல்லது நிலையத்திற்கு அல்லது வேறு பொருத்தமான நிறுவனத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் சம்மதத்துடன் அத்தகைய ஆளுக்கு, அத்தகைய நிலையத்துக்கு அல்லது நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, அமைச்சர், வர்த்த மானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் விலங்குகளின் நலம்பேணலுக்காக ஏற்பாடுசெய்யும் இடமொன்றாக ஒரு நிலையத்தை அல்லது நிறுவனத்தைப் பெயர்குறிக்கலாம்.

**32.** நீதிவானொருவர், பொலிஸ் அலுவலரொருவரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல் அல்லது அவரது சொந்தப் பிரேரணையின்மீது எந்த நாய் தொடர்பில் இச் சட்டத்தின் கீழான தவறு புரியப்பட்டதாகச் சார்த்தப் படுகின்றதோ, அல்லது புரியப்படுகின்றதோ அல்லது புரியப்படும் சாத்தியம் உண்டோ அத்தகைய நாய்க்கெதிராக ஏதேனும் தவறு தொடர்ந்து புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அல்லது அத்தகைய நாய்க்கு அவசியமான கவனிப்பை அல்லது மருத்துவச் சிகிச்சையை வழங்கும் நோக்கத்துக்காக அத்தகைய நாயின் கட்டுக்காப்பை எடுப்பதற்கு விரும்புகின்ற பொருத்தமான ஆளின், ஓர் அரச பண்ணையின், விலங்குப் புகலிடத்தின் அல்லது வேறு பொருத்தமான நிறுவனத்தின் கவனிப்பிலும் கட்டுக்காப்பிலும் அதனை அவ்வாறு இடுதல் அவசியமானதெனத் திருப்திப்படுவதன்மேல், கட்டளை யொன்றை ஆக்கலாம். நீதவானொருவரின் கட்டளையினால் நாய்களைக் கவனிப்பின்கீழ் இடுதல்

**33.**(1) இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட ஒவ்வொரு நாயும், 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய ஆட்களினாலும் காலத்துக்குக்காலம் முன்னிறுத்தப்படுவதற்குத் தேவைப்பட்டாலொழிய, முப்பது நாட்களைக்கொண்ட குறைந்தபட்சக் காலப்பகுதிக்குத் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டதாதல் வேண்டும். நாய்களைத் தனிமைப் படுத்துதல்

(2) பின்வருவன நாயொன்றின் இறக்குமதியாளரின் கடமையாதல் வேண்டும்:-

(அ) தனிமைப்படுத்தலில் வைத்திருக்கப்படுவதற்குக் கட்டளையிடப்பட்ட ஏதேனும் நாய்க்குப் போதிய உணவு மற்றும் நீர் வழங்கலை ஏற்பாடுசெய்தல்; அத்துடன்

(ஆ) தனிமைப்படுத்தலில் வைத்திருக்கப்பட்ட ஒவ்வொரு நாயின் சிகிச்சைக்கும் பராமரிப்புக்கும் தனிமைப்படுத்தலில் இருக்கையில் இறந்துப் போகக்கூடிய ஏதேனும் நாயின் சடலத்தை அப்புறப்படுத்துவதற்கும் உறப்பட்ட எல்லாச் செலவுகளையும் பொறுத்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஒவ்வோர் இறக்குமதியாளரும் 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலான தனிமைப்படுத்தற் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(4) தனிமைப்படுத்தலுக்குட்பட்ட ஏதேனும் நாய் விசர் நாய்க்கடிநோயினால் பீடிக்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்படுமிடத்து, அத்தகைய நாயைக் கருணைக்கொலைசெய்து அதன் சடலத்தை அப்புறப்படுத்தும்படி கட்டளையிடுதல் இயைபான உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பின் அரசாங்க விலங்கு மருத்துவருக்கு அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் விலங்கு மருத்துவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

நீக்கங்களும் பேணல்களும்

**34.**(1) (476 ஆம் அத்தியாயமான) விசர்நாய்க்கடிநோய்க் கட்டளைச்சட்டமும் (477 ஆம் அத்தியாயமான) நாய்களைப் பதிவு செய்தல் கட்டளைச்சட்டமும் இத்தால் நீக்கப்படுகின்றன.

(2) (இதனகத்துப்பின்னர் "நீக்கப்பட்ட சட்டங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (476 ஆம் அத்தியாயமான) விசர்நாய்க்கடிநோய்க் கட்டளைச்சட்டமும் (477 ஆம் அத்தியாயமான) நாய்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டமும் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும்,-

(அ) நீக்கப்பட்ட சட்டங்களின் கீழ் செய்துகொள்ளப் பட்டதும் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் “நடைமுறைக்குவரும் தேதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான ஏதேனும் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, நடைமுறைக்குவரும் தேதியி லிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தமாக அல்லது உடன்படிக்கையாக இருத்தல் வேண்டு மென்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடப் படலாம்.

(ஆ) நீக்கப்பட்ட சட்டங்களின் கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் தொடுக்கப்பட்டுள்ளதும் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறா துள்ளதுமான ஏதேனும் துடர்ச்சி, குற்றவழக்கு, மேன்முறையீடு அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள், நடைமுறைக்குவரும் தேதியி லிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கத் தொடரப் படலாம்;

(இ) நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் தகுதி வாய்ந்தவொரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது தீர்ப்பு என்பன நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடப் படலாம்;

(ஈ) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்டதும் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதும் இச்சட்டத்தின்

ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராததுமான ஏதேனும் ஒழுங்குவிதி, அல்லது விதி, நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அல்லது விதிகளினால் திருத்தவும்படலாம் அல்லது ஒழிக்கவும்படலாம்;

(உ) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் வழங்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முன்னர் வலுவிலிருந்ததுமான ஒவ்வோர் உரிமமும் அல்லது பதிவும், நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமமாக அல்லது பதிவாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஓர் உரிமத்துக்கான அல்லது பதிவுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றாகக்கருதப்படுதல்வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கக் கையாளப்படுதலும் வேண்டும்.

**35.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய:- பொருள் கோடல்

"நாய்களுக்கான இனப்பெருக்க நிலையம்" என்பது, விற்பனைக்காக நாய்களை இனப் பெருக்கும் தொழில் கொண்டுநடாத்தப்படும் ஒரு தனியார் வாழிடமுட்பட்ட எவையேனும் வளவுகள் என்று பொருளாகும்;

"பணிப்பாளர்" என்பது, 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் என்று பொருளாகும்;

"வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மாவட்டச் செயலாளர்" என்பது, ஒரு நிருவாக மாவட்டம் தொடர்பாக, அரசாங்கத்தினால் அந் நிருவாக மாவட்டத்துக்காக நியமிக்கப்பட்ட மாவட்டச் செயலாளர் என்று பொருளாகும்;

"கருணைக்கொலை" என்பது, விலங்குக்குக் குறைந்த பட்ச வலியுடனும் துன்பத்துடனும், விரைவான மற்றும் மாற்றமுடியாத சுயநினைவு இழத்தலை விளைவிக்கும் ஒருமுறையைப் பயன்படுத்தி இறப்பைத் தூண்டுகின்ற செயல் என்று பொருளாகும்;

"அரசாங்க விலங்கு மருத்துவர்" என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர் கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவரும் இயைபான உள்ளூர் அதிகாரசபையின் நிருவாக எல்லைகளினுள்ளான கடமைகளைப் புரிவதற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்டுள்ளவருமான ஒரு விலங்கு மருத்துவர் என்று பொருளாகும்;

"கால்நடை விலங்கு" என்பது, உணவுக்காக அல்லது உணவு தயாரிப்பதில் வளர்க்கப்பட்ட மாடு (எருமையும் காட்டெருமையையும்), செம்மறி, பன்றி, ஆடு மற்றும் குதிரை உட்பட ஏதேனும் வீட்டு அல்லது வீட்டில் வளர்க்கப்பட்ட பாலூட்டும் விலங்கு என்று பொருளாகும்;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, அல்லது பிரதேசசபை என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட,

புரியப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங் களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறை வேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"சுகாதார மருத்துவ அலுவலர்" என்பது, சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சுகாதார மருத்துவ அலுவலர் அல்லது மேலதிக சுகாதார மருத்துவ அலுவலர் அல்லது துறைமுக சுகாதார மருத்துவ அலுவலர் அல்லது விமான நிலைய சுகாதார மருத்துவ அலுவலர் என்னும் பெயர்குறிக்கப்பட்ட பதவிக்கு நியமிக்கப் பட்ட எவரேனும் அலுவலர் அல்லது அப் பதவியில் செயலாற்றும் எவரேனும் அலுவலர் எனப் பொருள்படும் என்பதுடன் சுகாதார பிரதான மருத்துவ அலுவலர், சுகாதார பிரதி பிரதான மருத்துவ அலுவலர் மற்றும் மாநகரசபையின் நிருவாக எல்லைகளினுள் சேவையாற்றுகின்றவரான மாநகர சபையில் சேவையாற்றுகின்ற சுகாதார மருத்துவ அலுவலரையும் உள்ளடக்குகின்றது;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"தனிமைப்படுத்தல்" என்பது, எவையேனும் விலங்கை அல்லது ஏதேனும் பொருளைத் தனியாக்கி அதன் கட்டாயத் தடுத்துவைப்பு என்று பொருளாகும்;

"பதிவு செய்தல்" என்பது, அத்தகைய நாய் எந்த நிருவாக எல்லைகளினுள் வைத்திருக்கப்படுகின்றதோ அல்லது கண்டுப்பிடிக்கப்படுகின்றதோ அந்த நிருவாக எல்லைகளினுள்ளான உள்ளூர் அதிகாரசபையிடம் அந்நாயைப் பதிவுசெய்தல் என்று பொருளாகும்;

"சந்தேகிக்கப்பட்ட" என்பது, விசர்நாய்க்கடிநோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட மற்றும் "சந்தேகிக் கப்பட்ட விலங்கு" என்பது, நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் நாயினால் கடிக்கப்பட்டுள்ள, அல்லது நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் நாயுடன் தொடர்புகொண்டிருந்த, அல்லது வேறு வகையாக விசர்நாய்க்கடிநோய்த்தொற்றுக்கு வெளிக்காட்டி வைக் கப்பட்டுள்ள ஏதேனும் விலங்கை உள்ளடக்கும்;

"தடுப்பூசி ஏற்றல்" என்பது, ஓர் இளம் நாயின் விடயத்தில், பன்னிரெண்டு வாரங்களைக்கொண்ட வயதுக்குப்பின்னர் கொடுக்கப்படவேண்டிய விசர்நாய்க்கடிநோய்க்கெதிரான முதனிலைத் தடுப்பூசி ஏற்றலும் மற்றும் முதனிலைத் தடுப்பூசி ஏற்றலிலிருந்து ஆறுவாரங்கள் கழிந்தபின்னர் உடனடியாக அடுத்து கொடுக்கப்படவேண்டிய வலுவூட்டல் தடுப்பூசி ஏற்றலும் மற்றும் ஒரு வயதுவந்த நாயின் விடயத்தில் விசர்நாய்க்கடிநோய்க்கெதிராகக் கடைசித் தடுப்பூசி ஏற்றல் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் கழியுமுன்னர் கொடுக்கப்படவேண்டிய வலுவூட்டல் தடுப்பூசி ஏற்றலும் என்று பொருளாகும்;

"விலங்கு மருத்துவர்" என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவரும் இயைபான உள்ளூர் அதிகாரசபையின் நிருவாக எல்லைகளினுள் கடமைகள் குறித்தளிக்கப்பட்டுள்ளவருமான ஒரு விலங்கு மருத்துவர் என்று பொருளாகும்;

"வனவிலங்கு" என்பது, (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக் கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**36.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.